மாண்புமிகு திரு செ. மாதவன்: இந்த வழக்குகளில்கூட கனம் உறுப்பினர் சொன்னமாதிரி கிரிமினல் குற்றத்தின்கீழ் போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது. அடுத்து சர்சார்ஜ் ப்ரோசீடிங்ஸ் அடிப்படையில் கையாடல் செய்தவர்களிடம் இருந்து அந்தப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, I would like to get a clarification from the hon. Member. He speaks about the criminal action being taken. What does he mean by that.

THIRU K. VINAYAKAM : Under I.P.C., misappropriation of funds is a crime and if the crime is established, separate action can be launched against him in a criminal court and if it is proved, he can be sent to prison.

THE HON. THIRU C. N. ANNADURAI : It is not a criminal act but the hon. Member speaks about criminal action.

THIRU K. VINAYAKAM : Remedial action (laughter).

புத்தூர்–மா. கொத்தங்குடி சாலை

***235**—வினா. **திரு எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, புத்தூரிலிருந்து மா. கொத்தங்குடி கிராமத்திற்கு ரோடு போடும் வேலை எந்த நிலைமையிலுள்ளது?

(இ) அது எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) புத்தூர் கிராமத்திலிருந்து ஆறு பர்லாங் தொலைவிற்கு அச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

(இ) 1968 ஜூன் திங்களில் இந்த வேலை முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Retiring age of Govenment servants.

*13. Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are contemplating to fix the retiring age of Government servants as 50 as in the case of Central Government servants?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இல்லை.

திரு. ஏ. எம். ராஜா: முற்பட்ட வகுப்பினர் அரசாங்க வேலைகளில் இருக்கின்றனர் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் இப்போதுதான் உதவிப் பணம் பெற்று படித்து முன்னுக்கு வருகின்றனர் இவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்க அதிகார்கள் ஓய்வுபெறும் வயதைக் குறைக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.